**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி– 2020**

**D031 இலக்கணம் – 4 (யாப்பு, அணி)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. யாப்பருங்கலக்காரிகை எந்த யாப்பினால் ஆனது?
2. நேரசை எந்த நான்கு வகையில் அமையும்?
3. சொல் நிலையில் அமையும் தொடை எது?
4. தொடையும் தொடை விகற்பங்களுமாக மொத்தத் தொடைகள் எத்தனை?
5. நிலை மண்டில ஆசிரியப்பாவுக்குரிய சிறப்பான ஈறு எது?
6. வாயுறை என்பதன் பொருள் என்ன?
7. கலித்துறை மிகுதியும் இடம்பெறும் இலக்கியங்கள் யாவை?
8. அணி இலக்கணத்தின் பயன்கள் யாவை?
9. பொருள்தொடர்ச் செய்யுள் நூல்கள் இரண்டினைக் கூறுக.
10. சைவ சமயக் காப்பியங்கள் இரண்டினைக் கூறுக.
11. சொல்லின்பம் எவ்வெவ் வகைளில் அமையும்?
12. தண்டியலங்காரத்தில் கூறப்படும் பொருளணிகள் மொத்தம் எத்தனை?
13. தீயினால் சுட்ட புண் உள்ஆறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு – இத்திருக்குறளில் அமைந்துள்ள அணி யாது?
14. எண்வகைச் சுவைகள் யாவை?

15. அரிச்சந்திர புராணத்தில் அமைந்துள்ள காப்பியப் பண்பு யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. வாயுறை வாழ்த்து – விளக்குக.
2. ஒழிபியலில் சொல்லப்படும் மூன்று வகையான இலக்கணக் கருத்துகள்?
3. வனப்பு என்பது யாது? எத்தனை? இரண்டன் பெயர்களைத் தருக.
4. ஒன்றிய தளைகள் எத்தனை? அவற்றின் பெயர்களைத் தருக.
5. தீவக அணியின் பெயர்க் காரணம் கூறுக.
6. பின்வருவனவற்றுள் விரி உவமை, தொகை உவமை எவை எவை என்பதைக் குறிப்பிடுக.
7. தொகைநிலைச் செய்யுள் வகைகளை எழுதுக.
8. சமாதி என்பதற்கு ஒரு சான்று தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) யாப்பருங்கலக் காரிகை என்னும் யாப்பிலக்கண நூல் பற்றிய செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) எழுத்திலக்கணம் கூறும் புணர்ச்சியோடு இயைந்து நோக்கித் தளையின் இலக்ணத்தைக் கூறுக.

2. (அ) பக்தி இலக்கியங்கள், பெருங்காப்பியங்கள் போன்ற பெரும்பாலான தமிழ் இலக்கியங்களில் பா வகைகளைவிடப் பா இனங்கள் பெருவழக்குப் பெற்றிருப்பதற்கான காரணத்தை ஆராய்க.

(அல்லது)

(ஆ) ஒழிபியல் கூறும் எதுகை, மோனைக்குரிய புறனடையை விளக்குக.

3. (அ) தண்டியலங்காரம் விளக்கும் அணி இலக்கணக் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) தன்மையணி, உவமை அணி, உருவக அணி, தீவக அணி ஆகிய நான்கு அணிகளுக்கும் தண்டியலங்காரம் கூறும் இலக்கணத்தை எழுதுக.

***